Cooperative Dairy Societies in the North who supply milk to hospitals, community centres etc. have requested the Government to pay 10 cts. more for every pint. They are also pressing the Government to formulate a Guaranteed Price Scheme for milk.

The societies have pointed out that, following devaluation, the prices of poonac and other cattle-food have more than doubled. Therefore, they urge, the Government should adequately compensate them.

# Inaugural Meeting

The inaugural meeting of the St. Kaithar Fishing Cooperative Society was held at Mareesanpathy recently.

Mr. S. Stanislaus, President Northern Province Fishermen's Cooperative Societies Union who spoke, stressed the need for cooperative fishing societies and explained how they could help to better the lot of the fishermen.

Mr. L. B Philip, Fisheries Inspector dwelt at length on the conditions necessary for the success of a society and explained how societies should be organised and run.

The following were elected office-bearers: Messrs. N. Swampillai (President), P. Anthonipillai (Vice-President), G. Anthony (Secretary) and S. Anthonipillai (Treasurer).

## 'True Cooperative Spirit Necessary'

Unless every member is possessed by a truly cooperative spirit, the Cooperative Movement cannot flourish nor will members get the benefits of Cooperation, said Mr. M Mathibalasingham ACCD, Jaffna East at a farewell party given in his honour by the Northern Ports Tally Clerks Cooperative Society.

Mr. Mathibalasingham went on to say that the progress of the Movement meant the development of the country: the one implied the other.

Mr. N. Thiruchelvam who presided thanked Mr. Mathibalasingham for all the help and guidance he had given the society.

The Secretary, Mr. A Gurasingham, proposed the vote of thanks.

# *The Local Scene*

Surveyed by RAJ

### MAN'S HANDIWORK

It is customary to blame Nature whenever there are floods. But now we have it on authority that the recent floods in Jaffna were man's handiwork. Experts have stated that the blocking of the drains and the silting up of ponds were the factors mainly responsible for the never-before-witnessed floods. Over the years building has been going on haphazardly leading to drains being blocked and the seepage area being reduced. To add to this, the authorities never thought of dredging the ponds (in fact, in one particular instance the authorities partially filled up a pond); so it is no wonder that certain parts of Jaffna Town went under water. Instead of waiting till the floods hit us again, the authorities should immediately get down to the business of dredging the ponds, clearing the existing drains and building more drains. Unless this is done immediately, it'll only have to rain a little hard for us to be inundated once again.

Incidentally certain places yet possess a kind of war-scarred appearance, what with stumps of fallen trees taking up a good part of the road. At Grand Bazaar, abutting the Bus Stand, the Milk Booth yet lies crushed under a giant tree—a scene frozen, as it were, for all eternity, like the figures on the Grecian Vase. On Main Street too, a certain point is cluttered with stumps which have not yet been cleared. What are the authorities up to? Trying to preserve these as mementoes?

### SOMETHING OUT OF HOLLYWOOD

The Model Market that is going to come up in stages, is going to resemble one of those colossal Hollywood productions. If, as is reported, the Model Market—when complete—is going to stretch from the present fish market to KKS Road, then it's certainly going to be an extravaganza in stone. Is there really any need for such a gigantic market?

If this project goes through as planned, then it will mean that there will be absolutely no room for the expansion of the Bus Stand which already is congested enough. Secondly, it will mean that a part of Kasturiar road will disappear, thus forcing vehicles to detour (making them touch the nose, as it were, in a round-about way, as the proverb says).

Why, one wonders, is the Market being planned on such a grand scale? The answer seems to be that the only way to accommodate (or should I say appease?) all the displaced stall-holders and traders is to build a big enough market to take in everyone. If this reasoning sounds cock-eyed to you and me, then it's high time we learn that it is not only elected councillors who are subject to—and can succumb to—undue pressure.

### BICYCLE THIEVES

The Northern Province has earned the dubious distinction of having the largest number of bicycle thieves in the island —according to statistics. But there's one consolation—the Northern Province can boast of the lowest murder tally in the whole island—a mere 38 out of 720.

### STAYED

As was expected, the higher ranks of the teaching profession have shown once again that they cannot be dislodged. They have somehow managed to get a reprieve—the transfers of Arts and Science graduates doing GCE (AL) work have been deferred till May. What's the bet that come May, the transfers will be stayed till the end of the year and so on *ad infinitum?* It's only some graduates (who were not doing AL work) and Tamil trained teachers who have had to go out unhonoured and unsung.


**SOUTH YALPANAM MPCS UNION LTD., KILINOCHCHI.**

Phone : 8. T'gram : "Yarlunion".

We supply Provisions, Textiles, Agriculture requisites and Building materials.

Agents for : Messrs. Shell Company of Ceylon Ltd., Ceylon Nutritional Foods Ltd, B.C.C. Ltd., Elephant Brand Asbestos and Ceylon Petroleum Corporation.

**JAFFNA M.P.C.S. UNION LTD.**

Largest Wholesale Cooperative Establishment in the North,

*Authorised distributors for*

CEYLON STATE HARDWARE CORPORATION

also dealers in Textiles, Cement, Milk-foods, Groceries, Oilmanstores & Ceramics and all goods distributed by the

COOPERATIVE WHOLESALE ESTABLISHMENT

Address :

74/3, Hospital Road, Jaffna.

Retail Shop at :

15/1, Power House Road, Jaffna.


Printed by Nicholas James at St. Joseph's Catholic Press, Main Street, Jaffna and published by the Northern Division Co-operative Federation Ltd., Main Street, Jaffna. 15-1-1968

**கூட்டுறவு**

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வெளியீடு

**யாழ்ப்பாணம், 15-1-1968.**

# கூட்டுறவுக் கல்விக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன!

**கூட்டுறவுத் திணைக்களம் கல்விக் குழுக்களை நடாத்துவதற்கும் அவற்றை ஒழுங்கு செய்வதற்கும் அவற்றிற்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சியளித்தலுக்கும் முடிவு செய்துள்ளது.**

இக்கல்விக்குழுக்கள் பின்வரும நோக்கங்களுக்காக நடாத்தப்படவிருக்கின்றது.

- கூட்டுறவுத் துறையில் ஆர்வத்தை வளர்த்தல்
- கூட்டுறவுக் கோட்பாட்டினையும், நடைமுறையையும் கற்பித்தல்
- கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தீர்த்துக்கொள்ளக் கூடிய பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிய உணர்வை ஏற்படுத்தல்
- கூட்டுறவுச் சங்க உறுப்பினரின் அறிவை வளப்படுத்தல்
- புதிய சங்கத்தை ஸ்திரமான அத்திவாரத்தில் கட்டி எழுப்புதல்
- வலுவற்ற சங்கங்களுக்கு வலுவூட்டுதல்
- நன்முக இயங்கும் சங்கங்களை மேலும் சிறப்பாக இயங்குவதற்கு உதவியளித்தல்

இப்போதைக்கு ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவுக்கும் ஒவ்வொரு கல்விக்குழுத் தலைவரே நியமிக்கப்படுவா. இந் நியமனத்தை அவ்வப்பகுதி மாவட்ட சமாசமே செய்யும். இதற்கான விண்ணப்பங்களை மாவட்ட சமாசங்கள் கூட்டுறவு அலுவல்களில் அனுபவம் வாய்ந்த கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து கோரும். கூட்டுறவு அறிவும், ஆசிரிய அனுபவமும், தலைமை தாங்கும் தகுதியுமுடையவர்களினதும் விண்ணப்பங்கள் முக்கிய கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். தெரிவு செய்யப்பட்ட கல்விக்குழுத் தலைவர்களுக்கு நியமனத்தை மாவட்ட சமாசம் வழங்கும். இந்நியமன காலம் ஒருவருடமாகும். இக் கல்விக் குழுத் தலைவர்கள் சிறந்த முறையில் கடமையாற்றினுல் அவரது நியமன காலம் நீடிக்கப்படலாம்.

இத்தலைவர்களுக்கு பொல்கொலவிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் அல்லது உள்ளூர் கூட்டுறவுப் பாடசாலையில் பயிற்சி அளிக்கப்படும். ஆரம்ப பயிற்கிக் காலம் ஒருவாரமாகும். வெளிப்புறக் கருமங்களில் 3 மாதங்களுக்கு ஈடுபட்ட பின்னர் இத்தலைவர், களுக்கு புத்தூக்கு மதிப்பீட்டு வகுப்புக்கள் நடாத்தப்படும். பயிற்சிக்காலத்தில் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் இவர்களுக்கு கூட்டுறவு நிதியிலிருந்து ஒரு நாளைக்கு 5/- வீதம் பிழைப்பூதியப்படியும், போக்குவரத்துச் செலவும் வழங்குவார்.

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள ப. நோ. கூ. ச. சமாசங்களின் உதவியுடன் மாவட்ட சமாசங்கள் இக்கல்விக் குழுக்களை ஏற்பாடுசெய்தல் வேண்டும். இக்குழுக்களை ஏற்பாடுசெய்து அவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பு மாவட்ட சமாசங்களின் நிருவாக செயலாளருக்கு ஒப்படைக்கப்படல்வேண்டும்.

கல்விக் குழுத்தலைவர்கள் நியமிக்கப்படும் காரியாதிகாரி பிரிவுகளுக்கே கல்விக் குழுக்கள் அமைக்கப்படல் வேண்டும். கல்விக்குழுத்தலைவர்கள் தனது பகுதிக்கு ஆகக்கூடியது மூன்று கல்விக் குழுக்களையே ஒழுங்கு பண்ணல் வேண்டும். கலந்துரையாடல் எளிதாகவும் சுலபமாகவும் நடைபெறுவதற்கு ஒவ்வொரு கல்விக் குழுவும் 15 தொடக்கம் 20 பேரைக்கொண்டதாய் அமையவேண்டும். கல்விக்குழுவில் அங்கத்துவம் வகிப்பவர்களுக்கு வசதியான நேரத்திலும், இடத்திலும், நாளிலும் வகுப்புக்கள் நடாத்தப்படல் வேண்டும். இவ்வகுப்பின் காலம் 1 தொடக்கம் 1½ மணித்தியாலமாகும். இக கல்விக்குழுக்களில் பலம் குன்றிய சங்க உறுப்பினர்களுக்கு அல்லது அத்தகைய சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர விரும்புபவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

இக்குழுக்கள் அனைத்திற்கும பணவுதவி வழங்கும் பொருட்டு கூட்டுறவு ஆக்க ஆணையாளரே ஒப்புதலளிப்பார். ஆணையாளரின் இந்த ஒப்புதலைப் பெறுவதற்கு கல்விக் குழுத்தலைவர்கள் கீழ்வரும்ஆவணங்களைத் தயாரித்து உதவி ஆக்க ஆணையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

- ஒப்புதல் விண்ணப்பம்
- பிரயாணப் பாதையின் நிலப்படத்தின் இருபிரதிகள்
- கல்விக் குழுவில் பங்குபற்றுவோரின் பெயர், வயது, கல்வித் தகமைகள், கையொப்பம், முகவரி
- பாடத்திட்டத்தின் பிரதி
- கல்விக் குழுவின் நோக்கம், பெயர், திகதி, கூட்ட நேரம் போன்ற விபரங்கள் அடங்கிய கல்விக் குழுத்தலைவரின் அறிக்கை

கல்விக் குழுத்தலைவர் தமக்கான சுற்றுலா நிகழ்ச்சி நிரல்களை மாவட்ட சமாச நிருவாகச் செயலாளரின் ஒப்புதலுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கல்விக் குழுவிற்கான ஆரம்ப செலவுகளை மாவட்ட சமாசங்களையே கொடுத்தல் வேண்டும். இக்குழுக்களின் வகுப்புக்கள் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தபின், இவைக்காக மாவட்ட சமாசங்கள் செய்த செலவின் முழுத்தொகையையோ, அல்லது ஒரு பகுதியையோ கூட்டுறவு ஆக்க ஆணையாளர் மேற்படி சமாசங்களுக்குக் கொடுப்பார்.

இக் கல்விக் குழுத்திட்டம் செயற்படும் முதலாண்டில் கல்விக் குழுத்தலைவர்களுக்கு பிரயாணச்செலவு உட்பட ஒவ்வொரு வகுப்பிற்கும் 3/- வீதம் கூட்டுறவு நிதியிலிருந்து கூட்டுறவு ஆக்க ஆணையாளர் வழங்குவார். அதன்பின்பு மாவட்ட சமாசங்கள் தமது சொந்த நிதியிலிருந்தே இப் பணத்தை வழங்க வேண்டும்.

மாதமுடிவில் ஒவ்வொரு கல்விக்குழுத் தலைவரும் நடாத்தப்பட்ட ஒவ்வொரு வகுப்பிற்கும் 3/- வீதம் கோரப்படும் பணத்தொகையையும், வகுப்புக்களின் திகதிகளையும், பெயர்களையும் குறிப்பிடும் பற்றுச் சீட்டை மாவட்ட சமாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். இப்பற்றுச் சீட்டுடன் கல்விக் குழுத்தலைவர்கள் வைத்திருக்க வேண்டிய பதிவுப் புத்தகத்திலுள்ள அம் மாதத்திற்குரிய பதிவுகளின் பிரதியும் இணைக்கப்படல் வேண்டும்.

இப்போதைக்காக 15 பாடங்களடங்கிய பாடத்திட்டத்தையே மேற்கொள்ளப்படும். இத்திட்டம் 15 வாரங்கள் வரை தொடர்ந்து நடைபெறும். 15 வாரங்களுக்கு மேற்பட்ட பாடத்திட்டத்தைச் செயற்படுத்தினுல் அதில் பங்குபற்றுவோரின் ஆர்வம் குன்றும் என்ற அனுபவ உண்மையினுல் இத்திட்டம் இந்தக் கால எல்லையில் நடாத்தப்படுகிறது. அதேவேளையில் 15 வாரங்களிலே இவ்வகுப்புக்களில் பங்குபற்றுவோரின் ஆர்வத்தைக் குன்ருது தூண்டும் நோக்குடன் குறைந்தது

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

## தேமதுரத் தமிழோசை!

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்ருர் பாரதியார். வள்ளுவர் தமிழில் புனைந்த அருமறையாம் திருக்குறள் கிடைத்தற்கரிய பெரிய பொக்கிஷமாக உலகத்திற்கே கிடைத்து விட்டது என்பதை பாரதியார் நினைந்து பெருமிதமடைந்தார். அந்தத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எமது உள்ளமும் பெருமித மகிழ்வால் பூரித்தவண்ணமிருக்கின்றது.

இப்போது சென்னையில் நடந்தேறிய அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிலே 40 நாடுகளிலிருந்து பல்வேறு அறிஞர்கள் கருத்தரங்கிலே கலந்துகொண்டனர். இரும்பைக்கவரும் காந்தம் போல் கற்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் தமிழின் சீர்மையும், செழுமையும், பெருமையும் உலகத்தைக் கவர்ந்தமையே இதற்குக் காரணமாகும். இதன் மூலம் உலகத்தில் தமிழுக்கிருக்கும் மதிப்பைக் கண்டு உவகையடைகின்ருேம்.

மூன்று சங்கங்கள் தமிழை வளர்த்தன. 'சங்கத்திருப்பிலே வளர்ந்த பேதை' என்று ஒரு புலவர் அன்புடன் பாடினுர். பெருமை சான்ற சங்க காலந் தொடக்கம் இற்றைவரை இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் தமிழும் தமிழரும் வாழும் பகுதிகளிலெல்லாம் அன்றைய சீரிய பண்பாடு சிதைவுருது தொடர்ந்து இருந்து வருகின்றது. இந்து சமுத்திரத்தைச் சுற்றிய நாடுகளில் எமது தமிழ் உயிர் வாழும் ஒப்பற்ற மொழியாக இருந்து வந்தது. இப்போது அதன் தேனினும் இனிய தெவிட்டாத ஓசை பசிபிக், அத்திலாந்திக் சமுத்திர தீரங்களிலும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. ஈட்டியின் முனைகளிலோ, கெடுபிடி யுத்தங்களின் கொடுமையின் எல்லையிலேயோ தெள்ளு தமிழோசை பரந்து ஒலிக்கவில்லை. தமிழின் வனப்பிலே அங்குள்ளவர்கள் மோகங் கொண்டார்கள்; சமாதான அன்பு இறக்கையின் அரவணைப்பிலே அங்கெல்லாம் தமிழ் அன்னையின் இனிய குரல் பிறக்கின்றது! மேற்கத்திய அறிஞர்களாகிய வீரமாமுனிவர், கால்ட்வெல் ஆகியோர் தமிழ் அன்னையால் கவரப்பட்டு அவளுக்குப் புரிந்த அரிய சேவையின் மகத்துவத்தை இன்று மரீனு கடற்கரையில் எழுப்பப்பட்ட அச்செம்மல்களின் சிலை பகர்கின்றன. பல்வேறு மொழிகளையெல்லாம் துறைபோகக் கற்ற பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணேம்" என்ற முடிவைக் கூறினுர். "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்ருர். இப்படியெல்லாம் நமது மொழியையும் நாட்டையும் பற்றி உணர்ந்துகொண்டு மொழிக்காகவும் நாட்டிற்காகவும் உழைக்கவேண்டுமேதவிர, மறைவாக நமக்குள்ளே பழங்கதைகளையே பேசிக்கொண்டிருப்பதில் எதுவித பிரயோசனமுமில்லை யென்பதையும் அவர் சுட்டிக்காட்டினுர்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்"

எனவே, நமக்குள்ளே பழம்பெருமை பேசி அவமே காலத்தைப் போக்காது 20 ஆம் நூற்ருண்டின் தலை சிறந்த பெருமொழியாகத் தமிழை ஆக்குவதை எமது தலையாய கடமையாக நாம் மேற்கொள்ளவேண்டும். இந்நிலையில் தமிழ்ப்பகுதிகளிலுள்ள பல்கலைக் கழகத் தமிழ்த்துறைகள் மேற்கத்திய பல்கலைக் கழகங்களிலுள்ள மொழியியல் துறைக்குச் சமமாக நிற்க முடியாதிருப்பதை நாம் காணுகின்ருேம். விஞ்ஞானத்துறையில் உலகில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கின்றது. இது போதியளவு தமிழ் மொழியில் பிரதிபலிக்கப்படவில்லை என்பதை எவரும் மறுக்கமுடியாது. சென்னை தமிழாராய்ச்சி மகாநாடு தமிழாராய்ச்சிக்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும், இலக்கிய விருத்திக்கும் நல்ல தூண்டுதலாக அமைந்து தமிழ்க் கல்விக்கு இணையற்ற பாதையை வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்றைய போக்கில் தமிழை வளப்படுத்துவது எமது கடமையாக இருக்கிறது. இதற்கு நாம் அன்னிய மொழியாளரை எதிர்பார்க்க முடியாது. சமஸ்கிருதமும், பாளியும் அன்று தமிழ் மொழியை வளப்படுத்த உதவியதுபோல், இன்றைய சூழ்நிலையில் தமிழ்மொழி மேலும் உன்னத நிலையை அடைய வேண்டுமானுல் ஆங்கிலம்போன்ற அனைத்துலக மொழியின் உதவியையே பெறவேண்டும். எனவே, இன்று கற்போர் அனைத்துலக மொழிகளைக் கற்று அவற்றின் சீரிய கருத்துக்களை தமிழ்மொழியில் வெளியிடவேண்டும். அப்போதுதான் உலக அறிஞரின் சமமான மதிப்பைத் தமிழ்மொழி பெறும். இதன்மூலமே 20-ம் நூற்ருண்டின் பிற்பகுதிக்குரிய மொழியாகத் தமிழ் திகழமுடியும். குழந்தைகட்கு வேண்டிய பல்வேறு நூல்களை நாம் தமிழில் ஆக்கவேண்டும். ஏனெனில் தமிழ் மரபுடன் உலக மரபையும் அவர்கள் கற்கவேண்டியது அத்தியாவசியமாக இருக்கிறது.

கலைச் சொற்களைப் பொறுத்தவரை அவை அனைத்துலகிற்கும் பொதுவானதாக இருப்பதால் அவற்றின் ஆங்கில வடிவத்தை இந்திய மொழிகளின் ஒலி இயல்புக்கு ஏற்ப அமைத்து தமிழ் ஒலிவடிவம் கொடுக்கலாம்.

எழுத்திலும், பேச்சிலும், கலைச் சொற்களிலும் தனித் தமிழையே கைக்கொள்ள வேண்டுமென்று வாதாடுபவர்கள் தமிழுக்குக் குழிதோண்டுபவர்களாவர்.

புதிய நாடுகளில் குடியேறும் தமிழர்கள் தமது பண்பாட்டுச் செல்வத்தை மறவாது பேணிவளர்ப்பது அவர்களது கடமையாகும்: எதிர்காலத்தில் தமிழிசை, நாடகம், நடனம், திரைப்படம், இலக்கியம் அனைத்தும் அனைத்துலகையும் கவரவல்லனவாக மிளிரும் என்பதுதிண்ணம்.



முதலியார் ஜி. டி. சற். சிறிவர்த்தன கூட்டுறவுக் கொடியை ஏற்றி வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் முப்பதாவது மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்,

நீட்டோலை — கபிலர்

# தமிழாராய்ச்சி மகாநாடு

நாடு எங்கும் தமிழோசை, நகரமெங்கும் தமிழோசை, வீதிதோறும் தமிழின் முழக்கம். வீடுதோறும் தமிழின் விளக்கம் இவ்வாறு அன்று ஆசைக்கனவு கண்டார் பாரதியார்.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாடு பாரதியாரின் வேணவாவை மெய்ப்பித்து இன்பத் தமிழ்த்தேனைக் காதிலே பாய்ச்சியது. தமிழின் சுவையால், அதன் தொன்மையால், வளத்தால் கவரப்பட்ட ஆயிரக்கணக்கானோர் இம்மகாநாட்டிற்கு அணிசெய்தனர். உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து — நாற்பது நாடுகளிலிருந்து அறிஞர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். இவர்களில் பலர் இம்மகாநாட்டில் பேசிய நயமிக்க செந்தமிழ் பேச்சு அனைவரின் உள்ளங்களையும் இன்பத்தால் நிறைத்தன. இவர்களையெல்லாம் தமிழைக் கட்டாயம் படிக்கவேண்டும் என்று எவரும் வற்புறுத்தவில்லை; தமிழின் சுவையால், அதன் பெருமையால் கவரப்பட்டு நயந்து நயந்து கற்றூர்கள். "தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்" இச்சிறப்பினைக் காணவே அவர்களெல்லாரும் தமிழைக் கற்றூர்கள். உலகத்தின் கவனத்தையும், மதிப்பையும் பெற்ற பெருமகாநாடாக இத்தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்று வீடுதோறும், வீதிதோறும், நாடு எங்கும், நகரமெங்கும் தமிழ் முழக்கமும், விளக்கமுஞ் செய்தது. "தந்தை அருள்வலியாலும்— இன்று சார்ந்த புலவர் தவவலியாலும் இந்தப் பெரும்பழி தீரும்—புகழ் ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்" என்ற தமிழ்த்தாயின் திடமான வாக்கில் எமக்கு நம்பிக்கையொளி பிறக்கிறது.

கண்ணுக்கும், காதுக்கும் திகட்டாத இனிமை நல்கும் பெருவிழாவாக இம்மகாநாட்டினை சென்னை அரசாங்கம் பொறுப்பேற்று மிகவும் சிறப்பான முறையில் நடாத்தியதையிட்டு நாம் எல்லோரும் மனமாரப் பாராட்டுகிறேம்.

இம்மகாநாட்டையொட்டி தமிழை வளர்த்த சான்றேருக்குச் சிலைகள் எடுக்கப்பட்டன. இதுவும் வரவேற்கத்தக்க செயல்தான். ஆனால், இந்த விடயம் குறித்து ஆங்காங்கு சலசலப்புக்களும் கருத்து வேறுபாடுகளும் எழுந்தன. சரியான ஒரு வரையறையுடனும், திட்டத்துடனும் முடிவுடனும், சிலையெழுப்பும், விடயம் மேற்கொள்ளப்பட்டிருக்குமானல் இக்கருத்து வேறுபாடுகள் எழுந்திருக்கமாட்டாது. தமிழாராய்ச்சி மகாநாடு சிறப்பாக நடக்கும்போது இந்த விடயத்தில் சரியான ஒரு வரையில்லாதமையால் கருத்து வேறுபாடுகள் முளைத்தமை வருந்தத் தக்கதாகும்.

தமிழ் வளர்த்தவர்களுக்குச் சிலை என்பதுதான் பேச்சு. எனவே, கால்ட்வெல், போப் ஐயர், வீரமாமுனிவர், கம்பர், பாரதியார், பாரதிதாசன், திருவள்ளுவர், ஔவையார் முதலிய சான்றேருக்குச் சிலையமைக்கப்பட்டமை நியாயமானது; பாராட்டத்தக்கது. நெஞ்சையள்ளும் காவியம் பாடித் தமிழை வளர்த்த இளங்கோவிற்குச் சிலை எடுக்காத வேளையில், அவரது காவியத்தலைவியாகிய கண்ணகியையும் தமிழை வளர்த்த சான்றேரின் பட்டியலில் சேர்த்து சிலை எடுத்தமையை நாம் வரவேற்க முடியாதிருக்கின்றது. கற்பின் கொழுந்து, பொற்பின் செல்வி, கற்புடைய மாதர் குலதெய்வம் என்றெல்லாம் நாம் கண்ணகியை வணங்குகிறேம். பெண்மையின் அச்சீரிய தெய்வீகப் பண்பாடு நம் மாதர் குலத்திலே சுடர்வீசவேண்டும் என்று ஆசைப்படுகிறேம். ஆனால், காவியத் தலைவியாகப் படைக்கப்பட்ட கண்ணகியை தமிழ் வளர்த்த சான்றேர் பட்டியலில் சேர்த்தமை முறையற்றதாகவும், ஒழுங்கற்றதாகவும் இருக்கின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ஸ்ரீநேரு தான உயிருடன் இருக்கும்போது தனக்கு எவரும் சிலை எடுக்கக்கூடாது என்று கண்டிப்பான தடைபோட்டிருந்தார். இதை நாம் நோக்கும்போது மிகவும் சரியானநெறி என்றே படுகின்றது. ஒருவர் உயிருடன் இருக்கும்போது அவருக்குச் சிலையெழுப்பி மாலையிட்டு மரியாதை செய்வது உசிதமானதல்ல. ஒருவர் இறந்தபின்பு அவரின் உருவத்தை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கும் மரியாதை செய்வதற்குமே சிலையெழுப்பப்படுகிறது. அவர் உயிருடன் இருக்கும்போது அவருக்கே மாலை போடலாம்; மரியாதை செய்யலாம். அவரது சிலைக்கு இவைகளைச் செய்யவேண்டிய அவசியமில்லை. ஆகவேதான் தமிழ் வளர்த்த சான்றேர் பட்டியலில் சென்னை முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாத்துரைக்கு சிலையெடுத்தமையும்முறையற்றது என்பதைக் குறிப்பிடுகின்றேன். திரு. அண்ணாத்துரை தமிழில் ஒரு மறுமலர்ச்சியையும், வேகத்தையும் உருவாக்கினர் என்பது உண்மை. அதற்காக அவர் தனது சிலைக்குத் தானே 'மொடலா'க இருந்து உதவியதை பெருந்தன்மையான விடயம் என்று கொள்ள முடியவில்லை. மேலும், திரு. அண்ணாத்துரை தமிழை வளர்த்தார் என்று சிலையமைத்தால் அந்த மதிப்பீட்டின்படி இன்னும் பலருக்கல்லவா சிலையெழுப்பவேண்டியிருக்கிறது!

தமிழ் நூல்கள் எல்லாவற்றிலும் மிகவும் தொன்மை வாய்ந்த நூல் தொல்காப்பியம். அதை இயற்றியவர் தொல்காப்பியர். தமிழுக்கு இலக்கணம் வகுத்து பழம் பெரும் நூலை எழுதிய தொல்காப்பியருக்குச் சிலையில்லை. தமிழ் வளர்த்த நாவலர் பெருமானுக்கு ஏன் சிலை எழுப்பவில்லை என்று குரலெழுப்பிய பின்புதான் சிலையெழுப்புவதாகக் கூறியிருக்கிறார்கள்.

தமிழ் வளர்த்தோர் வரிசையில் தாம் விரும்புபவருக்குச் சிலையெழுப்பும்படி பணம் கொடுத்தாற்றான் அந்தப் பணத்தைக்கொண்டு சிலையெழுப்புகிறார்களாம். இவைகளை நோக்கும்போது சிலையெழுப்பும் விடயம் ஒழுங்கற்றதாகவும், திட்டமற்றதாகவும் அமைந்துவிட்டது என்பது தெளிவாக விளங்குகிறது. இம்மகாநாட்டை நடாத்துபவர்கள் உண்மையாகத் தமிழை வளர்த்த சான்றேரின் பட்டியலைச் சரிவர எடுத்து அவர்களுக்குச் சிலையெடுக்க வேண்டும் என்று தீர்மானித்து அதற்கெனத் தாமே நிதியைச் சேர்த்திருக்கவேண்டும். அந்த நிதியிலேயே சிலைகளை எழுப்பியிருக்கவேண்டும். அதைவிட்டு ஒவ்வொருவரும் தாம் விரும்பும் தமிழ் வளர்த்த சான்றேருக்குச் சிலையெழுப்பும்படி பணம் கொடுத்தாற்றான் சிலை அமைக்கப்படும் என்ற நிலையை உருவாக்கியிருக்கவே கூடாது. இந்த நிலை உயிருடன் இருப்பவருக்குச் சிலையெழுப்புவதற்குப் பணத்தை வாரிக் கொடுப்பவருக்குத் தக்க பயனைக் கொடுக்க உதவும் என்ற உண்மையை மறுக்க முடியாது.

சிறப்பாக நடைபெற்ற இம்மகாநாட்டில் சந்தனம் என்று அரசியல் சேறு அள்ளி வீசப்பட்டமை மிக மிக வருத்தத்திற்குரியதாகும். தமிழாராய்ச்சி மாநாடு அரசியல் மகாநாடாக ஒருபக்கம் சார்ந்து விளங்கியதைக் கண்டு பலரின் உள்ளங்கள் வேதனைப்படுகின்றன.

# அமெரிக்க முறையல்ல, சீனத்து முறையே தேவை!

மக்கள் தொகை குறைவாகவும் நிலப்பரப்பு அதிகமாகவும் உள்ள அமெரிக்க, ரஷிய விவசாய முறைகள் நம் நாட்டுக்குப் பொருந்தாது. நம்மைப்போல் மக்கள் தொகைப் பெருக்கமும் நிலப் பிரச்சினையும் உள்ள சீனத்து விவசாய முறைகளை நமது விவசாயத் துறையிலுள்ள வாலிபர்கள் ஆய்ந்து அறியவேண்டும். விவசாயம் கிராமங்களிலும் தொழில்கள் நகரங்களிலும் பிரிந்து கிடப்பது ஆபத்து. இவை இரண்டு கிராமங்கள் தோறும் இணைந்து நடைபெறுவதுதான் மனித ஒருமைப்பாட்டை உருவாக்கும். விேனபா அடிகளின் இந்த அடிப்படைச் சிந்தனை எல்லோருடைய சிந்தனைக்கும் வேலை அளிக்கிறது.

பிரம்மவித்யா மந்திரத்தில் இங்கே அறை இருக்கிறது என்றால் அதோ வயல் இருக்கிறது. இதனால் இந்த அறையிலிருப்பவர்களுக்கு இங்கிருந்து வயலுக்குப் போகவும் அங்கிருந்து இங்கே திரும்பிவரவும் 2 நிமிடங்களுக்கு மேல் தேவைப் படுவதில்லை. எல்லாம் கண்முன் இருப்பதால் காவலுக்கென்று தனியே ஆட்களை அமர்த்த வேண்டியிருப்பதில்லை. இங்கே உள்ள அச்சகமும் பக்கத்திலேயே இருக்கிறது. இதேபோல நீங்கள் கிராமங்களிலும் எல்லா வசதிகளையும் செய்து தந்து விவசாயத்தோடு கூடக் கைத்தொழில்களையும் இணைத்து விட்டால் நம் வேலை எல்லாம் நடந்ததாகும். அவ்வாறு செய்யாமல் ஒரு கிராமத்தில் விவசாயம் மட்டும் நடந்து இன்னென்றில் ஏதோ ஒரு கைத்தொழில் மட்டும் நடந்து வருமானல் நீங்கள் கூறும் இணைப்பு Individual integration)க்கு இடமில்லாமல் போய்விடும். இதைத்தவிர அது திட்டமிட்ட பொருளாதார ஏற்பாடாகவும் (Economic planning) இராது.

திவ்ய தரிசி என்ற கேலிச் சித்திரக்காரர் கி. பி. 2000 இல் நாட்டில் செல்வம் கொழிக்கும், ஒரு குறையுமிராது என்று கூறுகிறார். இன்று நாட்டின் மக்கள் தொகை 45 கோடி என்றால் கி. பி. 2000 வரும் போது இது இரட்டித்திருக்கும். அதாவது மக்கள் தொகை 90 கோடி ஆகியிருக்குமென்று கொள்ளவேண்டும். இதனால் இப்போது ஒவ்வொருவருக்கும் சராசரி கிடைக்கக்கூடிய நிலத்தில் பாதி நிலம் தான் அப்பொழுது கிடைக்கக்கூடும்.

அதற்குள் நீருக்கும் பிறவற்றிற்கும் எவ்வளவு அதிக ஏற்பாடுகள் செய்ய முயன்றிருந்தாலும் பெரிய மாறுதல் எதையும் உண்டாக்கி விடமுடியாது. இப்பொழுது உள்ளதைவிட 30, 40 ஆண்டுகளுக்குப் பிறகு நம் ஒவ்வொருவரிடமும் உள்ள நிலத்தின் அளவு குறைவாகத்தான் இருக்கும். அல்லது விவசாயத்திற்குத் தேவையாய் இருப்பவர்களை மட்டும் கிராமங்களில் வைத்துக்கொண்டு மற்றவர்களையெல்லாம் நகரங்களில் குடி அமர்த்தி அவர்களுக்கென பல்வேறு தொழில்களை அங்கே நடாத்துங்கள்.

## விவசாயத்தை வைத்தே இதர தொழில்

மேலும், நீங்கள் பிரத்தியேகமாக தொழில்கள் ஆரம்பிக்கப்போகிறீர்களென்றால் அதற்கு என்ன அர்த்தம்? 10 லட்சம் பேருக்கு சித்திரம் வரையும் தொழிலில் பிழைப்பு அளிக்க முடியும் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இப்போது நம் நாட்டில் உணவு தானியத்தில் பற்றுக்குறை இருந்து வருகையில், நமக்குத் தேவையான உணவு தானியங்கள் இங்கே உற்பத்தியாகாதிருக்கையில் ஏராளமாக சித்திரக் கலைஞர்கள் இருப்பதனால் நமக்கு என்ன நன்மை? அவர்களால் ஒரு மணி தானியம உண்டாக்கித்தர முடியுமா? ஆனால் இன்று சித்திரக் கலைஞர்களுக்கு விவசாயிகளைவிட எவ்வளவு அதிக ஊதியம் கிடைக்கிறதோ அவ்வளவு கிடைக்காது. அது இரண்டாம் தரத் தொழிலாகவே (Secondary occupation) கருதப்படும்.

ஒரு விவசாயிக்குக் கிடைப்பதைவிட சித்திரம் வரைபவருக்கு குறைந்த கூலியே கிடைக்கும். இதைக்கொண்டு இந்நாட்டில் சித்திரக் கலைக்கு மதிப்பில்லை என்று ஆகிவிடாது. மதிப்பு இருப்பதாலேயே நாங்கள் வயிறு நிறைய உணவு கொள்கையில் அவர்களுக்கு கால் வயிற்றுக்காவது

**விேனபாஜி**

அளிப்போம். எங்கள் வயிற்றுக்கு உணவில்லாமல் காயப்போட்டு விட்டு வயிறு புடைக்க தின்னுமாறு சித்திரக் கலைஞர்களுக்குத் தரமாட்டோம். இது நடக்கக்கூடியதே அல்ல.

ஆகையால் சித்திரக்கலை முதலிய பிற பிழைப்பு வழிகளை நீங்கள் எவ்வளவு ஆதரித்தாலும், அதை ஒரு முக்கிய தொழிலாகக் கருதுவதற்கு இல்லை. அதுவும் ஒரு தொழில் தான்; அதைச்செய்வோருக்கும் ஊதியம் கிடைக்கவேண்டியதே. ஆனால் எதை நம்பி அதைச்செய்வது? அடிப்படைத் தொழிலிலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து எடுத்தே இதற்கும் இதைப் போன்ற மற்றவற்றிற்கும் தரவேண்டியிருக்கும். ஆகையால் நிலத்தை மட்டும் நம்பியிராமல் மரங்களைப் போல காற்றிலிருந்தும் போஷணை பெறுவதற்கு நீங்கள் வழிகண்டுபிடிக்க முடியுமானல் உங்களுக்கு இப்பொழுது போல் உணவு முதலியன தேவைப்படா, ஆகையால் இம்மாதிரியான யுக்திகளை செய்ய முடிகையில் நம்மால் வெகுவாக முன்னேறவும் முடியும். ஆனால் நிலத்தின் விளைவைக் கொண்டே நாம் வாழவேண்டியிருக்கையில் நம்மிடமுள்ள நிலத்தின் அளவு குறைந்து போகக் கூடிய நிலைமை ஒன்றும் தோன்றலாம் என்ற உண்மையை நாம் ஒப்புக்கொள்ளாமலிருப்பதற்கில்லை. எனவே குறைந்த நிலமுள்ள நம் நாட்டில் விவசாயத்திலும் சரி, கைத்தொழில்களிலும் சரி அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் நடப்பதைப் பார்த்து அதே போல இங்கும் செய்வது சாத்திய மல்ல என்பது தெளிவு. இருவகையிலும் அவர்களின் முறை நமக்குப் பயன்படாது.

## அமெரிக்க எழுத்தாளர் எழுதிய புத்தகம்

நான் இதற்குமுன் எப்பொழுதோ உங்களிடம் ஒரு புத்தகம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்ததாக ஞாபகம். அது கிங் (King) என்ற அமெரிக்க ஆசிரியர் ஒருவர் எழுதியது. அதன் பெயர் 48 ஆவது நூற்றுண்டில் விவசாயம் (Farming of the 48 th centuary) என்பது. அதிலிருப்பது சீன நாட்டின் கதை. அதன் முன்னுரையில் கிங் இந்தப் புத்தகம் இப்போது அமெரிக்கர்களுக்குப் பயன்படாது. 100,200 ஆண்டுகளுக்குப் பிறகு இது உபயோகமாயிருக்கலாம. இதனல் இன்று என் புத்தகத்தை எவரும் கவனிக்கமாட்டார்கள் என்பது எனக்குத் தெரிந்திருந்தும் இதை எழுதியிருக்கிறேன் என்று கூறுகிறார்.

அவர் மேலே 'அமெரிக்காவில் நடக்கும் விவசாயத்தில் எத்தனையோ வகை சேதாரம் (Wastage) இருந்து வருகிறது. சேதமிருந்தும் அவர்கள் அதைப் பொருட்படுத்த வில்லை. இதற்குக் காரணம் அவர்களிடம் ஏராளமாக நிலம் இருப்பதுதான் ஆனல் 100,200 ஆண்டுகளுக்குப்பால் இன்று சீனம் உள்ள நிலைமைக்கே அமெரிக்காவும் வந்து விடும். சீனத்தில் இங்கே போல விவசாயம் செய்வதில்லை. அவர்கள் எல்லாவற்றையும் மிகவும் செட்டுக்கட்டாகச் செய்கிறார்கள். ஒரு சிறு துரும்பையும் வீணக்குவதில்லை. அமெரிக்கர்களும் 100,200 ஆண்டுகளுக்குப் பிறகு சீனர்களின் வழியையே பின்பற்ற வேண்டியிருக்கும் என்று கூறுகிறார்கள். இந்த விவரங்களெல்லாம் அந்தப் புத்தகத்திலிருந்தே தெரிய வருகின்றன.

## சீனத்து விவசாய முறை நமக்குப் பொருந்தும்

அதில் அவர் எத்தனையோ விசித்திரமான யோசனைகளையும் கூறியிருக்கிறார்: ஓரிடத்தில், சீனத்தில் வயலில் வேலை செய்யும் மாடுகளின் வாயைக் கட்டுவதில்லை. வயலில் பயிர் விளைந்து தானியங்கள் பழுத்து அறுவடைக்கு சித்தமாயிருக்கும். இங்கே போல தாளிலிருந்து நெல்லைப் பிரிப்பதற்காக அவர்கள் மாடுகளைப் பூட்டி அவைகளின் மீது ஓட்டுவார்கள். அப்பொழுதும் அவைகளின் வாய் கட்டப்படாமல் இருந்தும் அவை தம் காலின் மீது மிதிபடும் கதிர்களைத் தின்பதே இல்லை. இதற்குக் காரணம் அந்த மாடுகளுக்காக வேறொரு இடத்தில் அவர்கள் புல்விளைவித்து அதில் அவைகளை முதலில் மேய்த்துத் திருப்தியான பின்பே தானியவயலுக்கு ஓட்டிக்கொண்டு போவது தான் என்கிறார். அதாவது அந்த மாடுகளுக்கு ஏற்கனவே வயறு நிரம்பியிருப்பதால் அவைகளால் சிறிதும் ஆசையில்லாமல், நெல்வயலில் போய் கர்மயோகம் செய்ய முடிகிறது. ஆனல் நம் நாட்டிலோ மாடுகளின் வாய்களைக் கட்ட வேண்டி இருக்கிறது. அவ்வாறு கட்டாவிட்டால் வயலின் விளைச்சல் முழுவதையும் அந்த மாடுகளே தின்று தீர்த்துவிடுமோ என்று நாம் அஞ்சுகிறேம்.

இதே போல அவர்கள் மல ஜலத்தை எப்படி நிலத்திற்கு உரமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது போன்ற எத்தனையோ நுணுக்கமான செய்திகள் அந்தப் புத்தகத்தில் காணக்கிடக்கின்றன. நம்மவர்களில் பெரும் பாலோர் விவசாயப் படிப்புக்காக அமெரிக்காவுக்குப்போய் அங்கேயுள்ள பெரிய பெரிய வயல்களையும், அவைகளில் பயன்படும் எந்திரக்கருவிகளையும் பார்த்து விட்டு வருகிறார்கள். ஆனல் அமெரிக்காவைப் போல் நம் நாட்டிலும் தொழில் வளம் ஏற்படுவதற்கு இன்னும் எவ்வளவு காலமாகும் என்று அவர்கள் யோசித்துப் பார்ப்பதில்லை.

## நிலப்பஞ்சம் தீர ஒரு சிறந்த வழி

எனக்கோ வருங்காலத்தில் எங்கும் ஒரே ஆகாய விமானமயமாக ஆகிவிடும். நடந்து செல்வதற்கு எல்லா இடங்களிலும் நல்ல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கும் என்று தெரிய

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

[முற்றொடர்]

# நான் விரும்பும் கிராமக் கூட்டுறவுச் சங்கம்

## அலுவலகம், சிப்பந்தி

கிராமத்தின் மத்திய பகுதியில் எல்லா கிராம மக்களும் அடிக்கடி சந்திக்கவும், கிராம முக்கிய நிகழ்ச்சிகளை நடத்தவும் வசதியான ஒரு பொது இடத்தில் சங்கத்தின் அலுவலகம் அமைதல் வேண்டும். சங்க நிருவாகிகளின் குடியிருப்பு வீடுகளில் எக்காரணங் கொண்டும் அலுவலகம் வைக்கக்கூடாது. நிருவாகிகளின் சொந்த வீடுகளில் அலுவலகம் ஏற்படுத்தினால், சில சமயங்களில் அங்கத்தினர்கள் பெருவாரியான அளவில் சங்க நடவடிக்கைகளில் கலந்து கொள்வது தடைப்படலாம். அனேக சந்தர்ப்பங்களில், சொந்த வீடுகளில் அலுவலகங்கள் அமைந்ததின் காரணமாக சங்க நடவடிக்கைகள் முன்னேறாமல் இருந்து வருவதைக் காணுகிறோம். ஓடு அல்லது ஓலை வேய்ந்த கட்டிடம் இதற்குப் போதுமானது. தார்சுக் கட்டடமாக இருக்க வேண்டியது கூடத் தேவையில்லை.

கூட்டுறவுப் பயிற்சி பெற்ற குறைந்தது ஒன்று அல்லது இரண்டு சம்பள சிப்பந்திகள் ஒவ்வொரு சங்கத்திலும் அமர்த்தப்படவேண்டும். அவர்கள் சங்கத்தின் அலுவல் நேரங்களிலெல்லாம் அலுவலகத்தில் பணி புரிதல் வேண்டும். சங்கத்தின் அலுவல் நேரத்தை அந்தந்த சூழ்நிலைக்குத் தகுந்தபடியும், அங்கத்தினர்களின் வசதிக்கு ஏற்றபடியும் நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

சங்கக் கட்டடத்தில் அலுவலக இடம் தவிர, கூட்டங்கள் நடக்க ஒரு தனிக் கூடம் இருப்பது விரும்பத்தக்கது. கூட்டுறவு, கிராம முன்னேற்றம் சம்பந்தமான சினிமாப் படக்காட்சிகளைச் சங்கத்தின் கூட்டத்தில் வாய்ப்பு ஏற்படும்போது பொதுமக்களுக்குப் போட்டுக்காட்டலாம்.

தினப் பத்திரிகைகள், இதர வெளியீடுகள் முதலியவைகளை சங்கத்தில் பெற்று வந்தால் சங்க அலுவலகத்தில் மக்கள் அடிக்கடி சந்திக்க நல்ல வாய்ப்பு ஏற்படுத்தியதாகும்.

## பேரவைக் கூட்டம் நடத்துவது

குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறை சங்கத்தின் பேரவையைக் கூட்டவேண்டும். சங்கத்தின் தணிக்கை அறிக்கை, ஆண்டறிக்கை முதலியவைகளையும் இதர பல விஷயங்களையும் அக்கூட்டத்தில் ஆலோசித்து முடிவெடுக்கவேண்டும். சில இடங்களில் இப்போது வழக்கத்தில் இருந்து வருவது போல இல்லாமல் அடிக்கடி மகாசபைக் கூட்டங்களைக் கூட்டி முக்கியமான எல்லா விஷயங்களையும் விவாதிக்க வேண்டும்.

## உணவு உற்பத்தி

இன்று நமது நாட்டை எதிர்நோக்கியுள்ள உணவுப் பிரச்சினையானது மற்றெல்லாப் பிரச்சினைகளையும் விட மிகமிக முக்கியமானது. விவசாயத்தில், விளைவைப் பெருக்குவதன் மூலம் இந்த முக்கியமான பிரச்சினைக்கு நாம் நிரந்தரமான பரிகாரம் காணமுடியும். விளைவைப் பெருக்கும் முயற்சியில் நவீன, தொழில் நுட்ப, ரசாயன முறைகள் நல்ல பலனளித்துள்ளன. சிறு சிறு துண்டு நிலங்களை வைத்துக் கொண்டு, பழங்கால விவசாய முறைகளைக் கையாண்டு வந்தால் உற்பத்தியைப் பெருக்கமுடியாது. ஆகையால், விவசாய உற்பத்தியைப் பெருக்குவது விஷயமாய் அங்கத்தினர்களிடையே கருத்துப் பரிமாற்றங்களுக்கும் விவாதங்களுக்கும் அவ்வப்போது சங்கம் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையோ, வாரா வாரமோ அல்லது இதர சௌகரியமான சமயங்களிலோ இந்த விவாதங்கள் நடைபெற ஏற்பாடு செய்யலாம்.

முன்னேற்ற விவசாய முறைகளைக் கையாண்டு வேளாண்மை செய்துவரும் உள்ளூர் விவசாயிகளைக் கூட்டி வைத்து, மற்றவர்களுக்கு அவர்களுடைய அனுபவங்களைச் சொல்லும்படி சங்கத்தில் அடிக்கடி ஏற்பாடு செய்ய வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் அங்கத்தினர்களை நவீன விவசாய முயற்சிகளை மேற்கொள்ளும்படி ஊக்குவிக்க முடிகிறது. நல்ல விவசாய முறைகளை நேரில் கண்டறிவதற்கு ஏற்பாடு செய்வதும் விவசாயிகளுக்குச் செய்யும் பயன்தரத் தக்க சேவையாகும். இதற்காகவே அங்கத்தினர்களின் சுற்றுலாக்களைச் சங்கம் ஏற்பாடு செய்யலாம்.

பூசாரம் பற்றிய பரிசிலனைக் கருவிகளை சங்கமே வாங்கி வைத்து, பரிசோதகர்களையும் நியமித்து பூமிகளின் மண் வளத்தை ஆராய்ந்து அங்கத்தினர்களுக்கு ஆலோசனை வழங்கும் ஏற்பாட்டையும் சங்கம் மேற்கொள்ள வேண்டும். எந்த வகை பூமிக்கு எந்த வகைப் பயிர் ஏற்றது என்பதை அறிந்து விவசாயம் செய்வது இலாபகரமானது.

## உப தொழில்கள்

விவசாயிகளின் சராசரி வருமானமும்- அவர்களின் பொருளாதாரமும் பற்றுக்குறையானவைகளே. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும்; வருமானமும் பெருகவேண்டும். இதற்கு வழி? உப-தொழில்கள் மூலம் விவசாய மக்களின் வருவாயைப் பெருக்கலாம். இந்தத் துறையைப் பற்றி அதிகம் பேசப்பட்டு வருகிறதேயன்றி நடைமுறையில் அதற்கேற்ப பின்பற்றப்படுவது இல்லை. சாதாரண விவசாயி தமது

டாக்டர்
பி. நடேசன், எம். பி. பி. எஸ்

வழக்கமான புராதன பழக்க வழக்கங்களிலிருந்து மாறுபட வேண்டுமானால், அவருக்கு விசேஷ ஊக்கம் அளிக்க வேண்டும். புதிய கருத்துக்கள், நவீன நடைமுறைகள் ஆகியவைகள் விஷயமாய் அவர்களிடையே நவீன எண்ணங்களைப் புகுத்தினால் வெற்றி காணலாம். ஆகையால், லாபகரமான உப-தொழில்களைப் பற்றிய தகவல்களைப் பல இடங்களிலிருந்து சங்கம் சேகரித்து அவற்றை அங்கத்தினர்களுக்கு வழங்கவேண்டும். விவசாயிக்கு இலாபகரமான உப-தொழில்களில் கோழி வளர்ப்பு, பாற்பண்ணை போன்றவைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இவை இரண்டுக்கும் எப்போதுமே நல்ல மார்க்கெட் உண்டு. இவைகளை ஏற்படுத்த விவசாயிக்கு வேண்டிய நிதி வசதியும் எளிதில் கிடைக்கும். மாதர் அல்லது முதியவர்கள் இத்தொழில்களில் ஈடுபடலாம். கேரள மாநிலத்தை எடுத்துக்கொள்வோம். அங்கு ஒவ்வொரு குடும்பமும் கோழிப் பண்ணையை வைத்துள்ளது. இதன் காரணமாக, அந்த மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு ஏராளமான அளவில் முட்டைகளை அனுப்பி வருகிறது.

நம் நாட்டில் பால் தேவையைக் கணக்கெடுத்தால், கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு அது இருந்து வருவது தெரியவரும். ஆகையால் பால் உற்பத்தித் துறையில் ஈடுபடுவது விவசாயிக்கு மற்றுமொரு இலாபகரமான தொழிலாகும். வீட்டைச் சுற்றிலும் விவசாய பூமியில் சாத்தியமான பகுதிகளிலும் காய்கறிகளை உற்பத்தி செய்வது மற்றுமொரு இலாபகரமான தொழில். இன்னும் இவை போன்ற உப-தொழில்களை ஏற்று நடத்த, சங்கம் விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

## கூட்டு ஆலோசனைகள்

தேவையானபோது, பல்வேறு விஷயங்கள் சம்பந்தமாய் அங்கத்தினர்களிடையே ஆலோசனைகள் நடைபெறவும் சங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். விவசாய நடவடிக்கைகள், உப-தொழில்கள், சிறுவர்களின் கல்வியபிவிருத்தி, தொழில் நுட்பக் கல்வி, வேலை வாய்ப்பு முதலியன குறித்து கூட்டு ஆலோசனைகளை நடத்தலாம். கிராம வீட்டு வசதி, சுகாதார வசதி, போக்குவரத்து வசதி முதலியன குறித்தும் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாறிக் கொள்ளவேண்டும். இவைகள் சம்பந்தமாய் விஷய ஞானம் படைத்த நிபுணர்களின் ஆலோசனைகளை சமயம் வாய்க்கும்போதெல்லாம் சங்கம் பெற்று அங்கத்தினர்களுக்கு வழங்கவேண்டும். நடைபெறும் விவாதங்கள், ஆலோசனைகள் ஆகியவைகளின் முடிவுகள் அனுபவ ரீதியில் சாத்தியமானவைகளாய் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் கிராமத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளையும் பிரச்சினைகளையும் பற்றி சங்க அங்கத்தினர்கள் தங்களுக்குள் விவாதித்து முடிவு காணுவது அவர்களுக்கு இலாபகரமான பொழுதுபோக்காகும்.

இறுதியாகக் கூறுமிடத்து, ஒரு சிறந்த சமுதாய நலமன்றமாக கிராமச் சங்கம் இயங்கவேண்டும். கிராம சம்பந்தமான சகல விஷயங்களையும் எல்லாக் கோணங்களிலிருந்தும் அங்கத்தினர்கள் ஆராய்ந்து செயற்பட கூட்டுறவுச் சங்கம் மூலம் அவர்களுக்கு சிறந்த வாய்ப்பு ஏற்படவேண்டும். பொருளாதார சம்பந்தமான பிரச்சினைகளை மட்டுமல்லாமல் சமுதாய முன்னேற்றம் சம்பந்தமான சகல விஷயங்களையும் விவாதித்துத் திட்டமிட்டு அவைகளை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாயிருந்து கூட்டுறவு சங்கம் செயற்படுவது அவசியமானது. விவசாயிக்கு ஏற்படும் எல்லாவித பிரச்சினைகளுக்கும் பரிகாரமளிக்கும் சிறந்த நிவாரணமாக—பிணி தீர்க்கும் மாமருந்தேபோல்—கூட்டுறவுச் சங்கம் விளங்க வேண்டும். இதுவே நான் விரும்பும் கிராமக் கூட்டுறவு சங்கத்தின் இலக்கணமாகும்.

—கூட்டுறவு

[முற்றொடர்]

# சென்னை மாநிலத்தில் கூட்டுறவுத் துறையின் முன்னேற்றம்

பம்பாயிலுள்ள விவசாய மறுலேவாதேவி கார்ப்பொரேஷன் ஸ்தாபனத்தாரின் பரிசீலனையில் இவ்விரு திட்டங்களும் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்கள் அபிவிருத்திக்காகவும், நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்காகவும் இரண்டு இதர திட்டங்கள் பற்றியும் மத்திய நில அடமான பாங்கு ஆலோசனையை மேற்கொண்டுள்ளது.

உணவு உற்பத்தித் துறையில் கூட்டுறவு நில அடமான பாங்குகள் மிக முக்கிய பங்கு வகித்து வருகின்றன. இந்தத் துறையில் இப்பாங்குகள் புரிந்துள்ள பணியை எண்ணிப் பார்க்குமிடத்து வெறும் கடன் கொடுக்கும் சங்கங்களாகமட்டும் இவைகள் அமையவில்லையென்பதும், இந்த மாநிலத்தின் விவசாய முன்னேற்றத்தில் இப்பாங்குகள் சிறப்பான கவனம் செலுத்தி வருவதும் நன்கு புலனாகும்.

## விளைபொருள் விற்பனையும், பக்குவ நடவடிக்கைகளும்

கூட்டுறவுத் துறையில்விவசாயிகளுக்கு வழங்கப்படும் எளிய வட்டிக்கடன்களின் நற்பலன்களை விவசாயிகள் பரிபூரணமாய் அடைந்து நன்மை காணவேண்டுமாயின் அவர்களின் விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டுவது அவசியமாகும். இந்தத் துறையில் தாலுக்காக்களிலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அவர்களுக்கு உதவி புரிய முன் வந்துள்ளன. மகசூல் அறுவடையானதும் அதன் ஈட்டின் பேரில் இச்சங்கங்கள் குடியானவர்களுக்குக் கடன் வழங்குகின்றன. இதனால், அவர்களால் தங்கள் மகசூலை நல்ல விலை வரும்வரை இருப்பு வைக்க முடிகிறது. தவிர, இச்சங்கங்கள் விவசாயிகளின் விளைபொருள்களை அவர்கள் சார்பாக விற்பனை செய்யவும் உதவுகின்றன. மேலும், ரசாயன உரங்கள், கலப்பு உரங்கள், வித்துக்கள், விவசாயக் கருவிகள், இதர விவசாயத் தேவைகள் முதலியவைகளையும் வழங்குகின்றன. சரக்குகளை இருப்பு வைக்க இச்சங்கங்களும். கிராம நாணய சங்கங்களும் அரசாங்கத்தின் கடன்—மானிய உதவிகளைப் பெற்று அனேக கிடங்குகளை அமைத்துள்ளன. மூன்றாவது

வி. கே. சி. நடராசன்,
ஐ. ஏ. எஸ்.,
மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர்

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இச்சங்கங்கள் 1,032 கிடங்குகளை நிறுவின. சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பக்குவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பஞ்சு அரைக்கும் யந்திரங்கள், மணிலா உடைக்கும் 'டிக்கார்டிகேட்டர்'கள், அரிசி அறைவு சாலைகள், எண்ணை பிழியும் செக்குகள், பழம் பக்குவப் படுத்தும் சாதனங்கள் முதலியவைகளை அமைத்துக் கொண்டுள்ளன. 54 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் சேர்ந்து 18 பஞ்சு அறைவு சாலைகளும், 25 'டிக்கார்டிகேட்டர்'களும், 344 அரிசி அறைவுச் சாலைகளும், 2 அரிசி மில்லுகளும், 4 எண்ணெய் பிழியும் செக்குகளும், ஒரு காப்பிக்கொட்டை பக்குவம் செய்யும் யூனிட்டும் அமைக்கப்பட்டுள்ளன. இந்திய தேசிய அபிவிருத்தி கார்ப்பொரேஷன் ஸ்தாபனத்தின் தாராள நிதி உதவியைக் கொண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் நவீன அரிசி மில்லுகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் தவிர தமிழகத்தின் கூட்டுறவுத் துறையில் நூற்பு ஆலைகள், சர்க்கரை தயாரிப்புச் சாலைகள் போன்ற பெரிய தொழில் அமைப்புக்களும் தோன்றியுள்ளன. இந்த மாநிலத்தில் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள 7 கூட்டுறவுச் சர்க்கரைச் சாலைகளில் 4 ஏற்கெனவே வேலை துவங்கியுள்ளன, 2 அடுத்த பருவகாலத்திலிருந்து வேலை செய்யவுள்ளன, ஒரு ஆலையானது ஆரம்ப கட்டத்தில் இருந்து வருகிறது.

## விவசாயம் அல்லாத சில துறைகள்

விவசாயம் அல்லாத துறையில் நகர பாங்கிகள், சிப்பந்திகள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன, நகர்வாழ் மக்களுக்கும், அரசாங்கத் துறையிலும், ஸ்தல ஸ்தாபனங்கள், வியாபார நிலையங்கள் போன்றவைகளிலும் பணியாற்றுவோருக்கும் அவர்களின் அவசியக் கடன் தேவைகளை அளித்து வருகின்றன.

1962-ம் ஆண்டில் ஏற்பட்ட சீனப் படையெடுப்பு சமயத்தில் கூட்டுறவுப் பண்டசாலைகள் நாட்டு மக்களுக்கு அவர்களின் அவசியத் தேவைகளை வழங்கும் பணியில் உதவ முன்வந்தன. (வளரும்)

—கூட்டுறவு





மில்க்வைற்
நீலசோப்
பார்சோப்
பட்டு, பருத்தி, நைலோன், ரெர்லின்
துணிவகைகளையும்
பிரகாசமாகச் சலவை செய்கிறது.
எப்பொழுதும் மில்க்வைற் நீலசோப்—பார்சோப் பாவியுங்கள்.



வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் முப்பதாவது மகாநாட்டில் கலந்துகொண்ட கூட்டுறவாளரின் ஒரு பகுதியினர்

# கூட்டுறவு இயக்கத்தில் நற்பயனை எப்படிப் பெறலாம்?

''உண்மையான கூட்டுறவு மனப்பான்மை ஒவ்வொரு அங்கத்தவரின் உள்ளத்திலும் வேரூன்றினால் தான் கூட்டுறவு இயக்கத்தின் பலாபலனை அவர்கள் பெறமுடியும்'' என யாழ். கிழக்கு கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளராகக் கடமை புரிந்து இடமாற்றலாகிச் சென்ற திரு. மு. மதிபாலசிங்கம் வடபகுதி ரவி குமாஸ்தாக்கள் கூட்டுறவுச் சங்கம் அளித்த தேனீர் விருந்தின் போது பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூட்டுறவு இயக்கம் செம்மையுற மேலோங்கி வளர்வதால் கூட்டு முறையில் பல முன்னேற்றத் திட்டங்கள் உருவாகி நாடு நல்வளர்ச்சியடைய முடியும்'' என்று குறிப்பிட்டார்.

திரு. மதிபாலசிங்கத்தின் அரிய சேவை நலனைப் பாராட்டி தலைவர் திரு. நா. திருச்செல்வம் பேசினார். இவ்வைபவத்தில் கூட்டுறவு காரியாலயப் பரிசோதகர் திரு. T. சண்முகராசா வட்டார கூட்டுறவுப் பரிசோதகர் திரு. ஜே. ஆர். பிச் ஆகியோரும் கலந்து கொண்டனர். காரியதரிசி திரு. ஆ. குணசிங்கம் நன்றியுரைத்தார்.

## கூட்டுறவுக்...

(9-ம்பக்கத் தொடர்ச்சி)

3 வகுப்புக்களாவது பொதுவாகக் கிராமத்தைப் பாதிக்கும் பொருளாதார சமூக பிரச்சினைகளை ஆராய வேண்டும்.

இவ்வகுப்புக்களில் உப விதிகளைப் பற்றிய கலந்துரையாடல் 6 பாடங்களும், பொதுப் பிரச்சினைகளைப் பற்றிய கலந்துரையாடல் 3 பாடங்களும், துண்டுப் பிரசுரங்களைப் பற்றிய கலந்துரையாடல் 6 பாடங்களும் இடம் பெறும்.

புதுப்புதுச் சிந்தனைகளை உணர்த்துவதற்குக் கலந்துரையாடல் முறையே சிறந்ததாக இருப்பதனால் அந்த முறையே போதனை முறையாக இவ்வகுப்புக்களில் மேற்கொள்ளப்படும்.

இவ்வகுப்புக்களுக்குரிய பாடத்திட்டம் போதிக்கப்பட்டு முடிந்ததும், பரீட்சை நடாத்தப்பட மாட்டாது. ஒவ்வொரு பகுதியிலும் நடாத்தப்படும் கல்விக்குழுக்களைப் பற்றி அவ்வப்பகுதிக் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் அறிக்கை சமர்ப்பிப்பார். கல்விக்குழு செம்மையாக நடாத்தப்பட்டது என்ற உதவி ஆக்க ஆணையாளரின் அறிக்கையின் அடிப்படையிலேயே கூட்டுறவு நிதியிலிருந்து பணவுதவி வழங்கப்படும். இதுவும் தீர்மானிக்கப்பட இருக்கின்றது. கூட்டுறவு நிதியிலிருந்து எவ்வளவு பணம் இதற்காகத் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகின்றதோ அந்த அடிப்படையிலேயே பணவுதவி வழங்கப்படும்.

ஒவ்வொரு கல்விக்குழுவின் இறுதி வகுப்பிலும் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் கலந்து கொள்வதுடன் பங்கு பற்றுவோருடன் உரையாடுவதன் மூலம் கல்விக் குழுவின் திறமையினை மதிப்பிடுவர். உதவி ஆணையாளர் விரும்பின் பங்கு பற்றுவோருக்குச் சிறு வினாத்தாளை வழங்கி அவருடைய விடைகள் மூலம் ஒவ்வொருவரின் அறிவையும் பரீட்சிக்கலாம். இவ்வகுப்புக்களுக்கு ஆக்க குறைந்தது 75 வீதம் சமுகமளித்தவர்களுக்கு மாவட்ட சமாசம் சான்றிதழ் வழங்கும்.


உங்கள் உருளைக்கிழங்குப் பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்க பாவியுங்கள்

செல் கம்பனியாரின்
சிறந்த தயாரிப்பான

என்றெக்ஸ் இலைப்பகுதியைத் தாக்கும் பூச்சி புழுக்களுக்கு;

அல்டிறெக்ஸ் கிழங்கைத் தாக்கும் நிலப்பூச்சி புழுக்களைக் கொல்லும்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

சங்கங்களுக்கு விசேட சலுகைகள் உள.

தந்தி: அப்பீஸ் தொலைபேசி: 504


### அர்ச். கயித்தார் கூட்டுறவுச் சங்கம்

2-1-68 ல் நடைபெற்ற அர்ச் கையித்தார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டத்தில் வடமாகாண மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் திரு. எஸ். ஸ்ரனிஸ்லாஸ் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் மீன்பிடிச் சங்கங்கள் மீனவர்க்கு எவ்விதம் உதவி, வாழ்க்கையைச் சீர்படச் செழிக்கச் செய்ய வல்லன என்பவைகளை தெளிவாக எடுத்துரைத்தார். மீன் பிடிப்பரிசோதகர் திரு. K. R, பிலிப் சங்கங்களை எவ்விதம் நடாத்த வேண்டும் என்பது பற்றி விளக்கியுரைத்தார். பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. N. சுவாம்பிள்ளை, உப தலைவர்: திரு. P. அந்தோனிப்பிள்ளை, காரியதரிசி திரு. G. அந்தோனி, பொருளாளர் திரு. S. அந்தோனிப்பிள்ளை.

### பாற்பண்ணைச் சங்கங்களின் கோரிக்கை

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கூட்டுறவுப் பாற் சங்கங்கள் இப்போதுள்ள விலையிலும் பார்க்க ஒரு பைந்து பாலுக்கு பத்துச்சதம் கூட்டித்தர வேண்டும் என சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்க இருக்கின்றன. நாணய மதிப்புக் குறைவு ஏற்பட்ட காரணத்தினால் மாட்டுத்தீன் முன்பை விட இப்போது இரட்டிப்பு விலையேறிவிட்டது. எனவே இனிமேல் பாலுக்கு ஒரு உத்தரவாத விலைத்திட்டத்தினை அமைத்துத்தர வேண்டும் எனவும் மேற்படி சங்கங்கள் கேட்கும்.

## அமெரிக்க...

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

வருகிறது. யாத்திரை செய்பவர்களில் சிலர் வானவழியே விமானத்தில் பறப்பார்கள்; மற்றவர்கள் எல்லோரும் காலால் நடந்தே செல்வார்கள். ரயில் மோட்டார் ஆகியவைகளில் விவசாயத்திற்குப் பயன்படக் கூடிய நிலம் முடங்குவதால் அவை எல்லாம். எடுபட்டுப்போம். இப்போது ரயில் ஓடும் இடங்களிலிருந்து தண்டவாளங்களைப் பெயர்த்து எடுத்துவிட்டு அங்கெல்லாம் உழுது பயிர் செய்வார்கள். உள்ள நிலத்தில் ஒரு அங்குல அளவைக்கூட வீணாக்காமல் விவசாயம் செய்யப்படும். ஆகாய விமானத்தில், ஹெலிகாப்டரில் பறந்து சென்று தேவையான இடத்தில் போய் இறங்குவதனால் நிலத்திற்கு கேடு ஒன்றும் வராதாகையால் வருங்காலத் எல்லோரும் சர்வ சாதாரணமாக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு போக ஆகாய விமானங்களையே பயன் படுத்தப் போகிறார்கள்.

—இராமராஜ்யம்

### கட்டுப்பாட்டு விலை

| | சில்லறை விலை |
|---|---|
| வெங்காயம் [சிறு வெங்காயம் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்] | 0-28 |
| கொத்தமல்லி | 0-80 |
| பாசிப்பயறு | 0-48 |
| கடலைப்பருப்பு | 0-54 |
| துவரம்பருப்பு | 0-52 |
| சிறு வெங்காயம் | 0-28 |

## வரப் பெற்றோம்

### கலைச்சுடர்

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையினால் வெளியிடப்பட்ட 'கலைச்சுடர்' மணமிக்க நற்றமிழ் மலராய் மிளிர்கின்றது. கலாசாலைக் கீதம், சோமசுந்தரப்புலவரின் தமிழ்த்தாய் வணக்கம், நாவலர் பெருமான் முதலிய பாடல்கள் இனிமை சொட்டுகிறது. தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாத்துரை, கல்வி – தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோரது வாழ்த்துரைகளுடன் கூடிய கலைச்சுடர் அறிவுப் பசி கொண்டோர்க்குச் சிறந்த விருந்தாகும். ஆங்காங்கு சிறந்த படங்களுடன் விளங்கும் இம்மலரின் அமைப்பு சிறப்பாக அமைந்துள்ளது.

### கலைச் செல்வி

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் 22 வது ஆண்டு மலரான 'கலைச் செல்வி' அக் கலாசாலையின் முன்னைநாள் தமிழ்விரிவுரையாளரான பண்டிதர் செ. பூபாலபிள்ளையின் நினைவு மலராக மலர்ந்துள்ளது. தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாத்துரை, கல்வி தொழில் அமைச்சர் இரா நெடுஞ்செழியன் ஆகியோர் இம்மலருக்கு வாழ்த்துரை நல்கியுள்ளனர். அமரர் பூபாலபிள்ளையின் நலன் பாராட்டி கி. வா. ஜகந்நாதன், எஸ். வேலுப்பிள்ளை, பண்டிதர் சங்கர வைத்தியலிங்கம், புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை ஆகியோர் கவிமாலை புனைந்துள்ளனர். கருத்துப் பொதிந்த நல்லகட்டுரைகளும், கலாசாலையின் நன் முயற்சிகளில் பூபாலபிள்ளை எடுத்துக் கொண்ட பெரும் பங்கினை விளக்கும் படங்களும் மலருக்கு அழகூட்டுகின்றன.

### பொது அறிவு

திரு. க. தணிகாசலம் அவர்களால் எழுதப்பெற்ற 'பொது அறிவு' சிறந்த முறையில் அமைந்துள்ளது; மாணவர்களுக்கு பயன்படத்தக்க பொது அறிவு விடயங்கள் இதிலே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. 156 பக்கங்களையுடைய இப்புத்தகத்தின் விலை 2/50. இப்புத்தகம் ஒரு நல்ல முயற்சி,


சிக்கனமான செலவில் சிறப்பாக வாழ்வதற்கு
வலி. மேற்கு. ப. நோ. கூ. ச. சமாசம் (வரையுள்ளது)
தொலைபேசி: 525, மானிப்பாய். முகவரி: சங்கானை.

* உண்ணவேண்டிய உணவுப்பொருள்கள்
* உடுக்கத் தேவையான துணிவகைகள்
* இருக்க வீடமைக்கும் பொருள்கள்

வேறென்ன வேண்டும்?

"அல்கன்" சீனியர் யூனியர் மண்ணெய் பம்புகள், "சீரே" யேமன் எலக்றிக் பம்புகள்

அனைத்துக்கும் உப உறுப்புக்கள்
ஆனைமார்க் "அஸ்பெஸ்ரோஸ்"
அதிக பலமிக்க பராக்கிரமா ஓடுகள்
அல்கத்தீன் எஸ்லோன் பைப்புவகை
வெடி மருந்துப் பொருட்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு லொறி மூலம் பொருளேற்றி இறக்கும் வசதியும் எப்போதும் செய்து தரப்படும்.

விரும்புவோர் நேரிலோ, தொலைபேசி மூலமோ, கடித மூலமோ தொடர்பு கொள்ளவும்,

இது உங்களுடைய ஸ்தாபனம்.


வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைக்காக யாழ்ப்பாணம். கூட்டுறவு அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது